RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-3 | இதழ்-348 | 15 டிசம்பர் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## நெல்லையில் நீடிக்கும் மழையால் தாமிரபரணியில் வெள்ளம்



நெல்லை, டிச.15

நெல்லை மாவட்டத்தில் நீடிக்கும் மழையால் தாமிரபரணியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நெல்லை மாநகரப் பகுதிகளில் இன்று (டிச.14) காலை முதலே மிதமான சாரல் மழை பெய்து வருகிறது. நெல்லை மாவட்டத்தின் அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளான மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் இன்று காலையில் மழையின் அளவு குறைந்துள்ளது. 118 அடி கொள்ளளவுள்ள மணிமுத்தாறு அணையில் தற்பொழுது 91 அடி தண்ணீர் உள்ளது. 143 அடி கொள்ளளவுள்ள பாபநாசம் அணையில் 82 அடி தண்ணீர் உள்ளது. இங்கிருந்து சுமார் 2,500 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

தாமிரபரணி ஆற்றில் நெல்லை மாநகரப் பகுதியில் சுமார் 70 ஆயிரம் கன அடி தண்ணீர் தற்பொழுது சென்று கொண்டிருக்கிறது. மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் இரவு முழுவதும் மழை பெய்து இன்று அதிகாலை முதல் சாரல் மழையாக மாறி உள்ளது.

தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் முக்கூடலில் முகா மிட்டு அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கனமழை காரணமாக நெல்லை மாவட்டத்தில் உள்ள கூடுதாழை, உவரி, இடிந்தகரை, கூத்தன் குழி ,பெருமணல், உள்ளிட்ட 10 மீனவ கிராமங்களைச் சார்ந்த சுமார் 8000 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் சுமார் 1500 க்கு மேற்பட்ட நாட்டுப் படகுகள் கடற்கரை ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நெல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## இந்து சமய அறநிலையத் துறையை மத்திய தணிக்கைத் துறை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்: இந்து முன்னணி



சென்னை, டிச.15

கோடிக்கணக்கில் வருவாய் வரக்கூடிய இந்து சமய அறநிலையத் துறையை மத்திய தணிக்கைத் துறை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய அரசியல் சாசன சட்டத்தின் மூலம் தன்னாட்சி பெற்ற அமைப்பாக தலைமை தணிக்கை துறை செயல்பட்டு வருகிறது. மத்திய மாநில அரசுத் துறைகளின் வரவு செலவுகள், வருவாய் இழப்புகள், அநாவசிய செலவுகள் போன்றவற்றை கண்டறியவும்; மக்களின் வரிப்பணம் வீணடிக்கபடுவதை தவிர்க்கவும் தன்னாட்சி பெற்ற தணிக்கை அமைப்பு ஏற்படுத்தபட்டுள்ளது. அந்த வகையில் மத்திய மாநில அரசுகளின் அனைத்து துறைகளும் தணிக்கை செய்யபடுகின்றன.

உதாரணமாக நம் நாட்டின் மாபெரும் ஊழலான 2ஜி அலைவரிசை ஊழல், தணிக்கை துறை அறிக்கை மூலமே கண்டறியபட்டது. எனவே வருடாந்திர தணிக்கை அவசியமானதாக உள்ளது. அதன் மூல பல ஊழல்கள், வருவாய் இழப்புகள் கண்டறியபட்டுள்ளன என்பது வரலாறு.

ஆங்கிலேய அரசு காலத்தில் இந்து கோயில்களின் வரவு செலவுகளை மட்டுமே ஆய்வு செய்யும் அமைப்பாக இந்து சமய அறநிலையத் துறை செயல்பட்டு வந்தது. சுதந்திரத்துக்கு பிறகு இந்து கோயில்களின் தங்க, வைர, வெள்ளி பொக்கிஷங்கள், உண்டியல் வருவாய், சொத்துகளின் வருவாய், நிலங்கள், கட்டிடங்கள் போன்ற அனைத்தையும் நிர்வகிக்கும் ஏகபோக உரிமையாளராக இந்து சமய அறநிலையத் துறை மாறிவிட்டது.

மாநில அரசின் அனைத்து துறைகளும் தணிக்கைக்கு உட்படுத்தபடும்போது மாநில அரசின் இதர துறைகள் போல தனி அமைச்சகத்துடன் செயல்படும் இந்து சமய அறநிலையதுறையும் எனவே, காலியாக உள்ள அறங்காவலர் குழுக்களை உடனடியாக நியமிக்க வேண்டும். மேலும், அறநிலையத்துறையின் ஒட்டுமொத்த வரவு செலவு சொத்து கணக்கு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் தலைமை கணக்கு அமைப்பின் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்துகிறது" என்று தெரிவித்துள்ளார்.

## பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரமாக உயர்த்த வேண்டும்: அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, டிச.15

பிப்ரவரி 4ஆம் தேதி நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரமாக உயர்த்த வேண்டும். அவர்களுக்கு புத்தாண்டுக்குள் பணி நியமன ஆணைகளை அரசு வழங்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் நியமிக்கப்படுவதற்காக 3,192 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 மாதங்களாகியும் அவர்களுக்கு இன்னும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. அரசு பள்ளிகளில் காலியிடங்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருப்ப தால், பணி நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந் துள்ள நிலையில், அறிவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையை குறைக்க தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

3,192 பட்டதாரி ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 25ம் நாள் வெளியிடப்பட்டது. அதன்படி விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த பிப்ரவரி 4ம் தேதி போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் மே மாதம் 18ம் தேதி வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்பட்டு, ஆசிரியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் ஜூலை 18ம் தேதி வெளியிடப்பட்டது.

அதன்பின் 5 மாதங்களுக்கு மேலாகியும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. கடந்த மாதம் 8ஆம் தேதி நடைபெற்ற கல்வித்துறை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆசிரியர்களை நியமிக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனுமதி அளித்ததாக செய்திகள் வெளிவந்தன.

ஆனால், அதன்பின் 40 நாள்கள் ஆகிவிட்ட நிலையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமின்றி, 3192 ஆசிரியர்களை தேர்வு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்ட நிலையில், அந்த எண்ணிக்கையை 2800 ஆக குறைக்க முயற்சிகள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. அந்த செய்திகள் சரியானவை என்றால், அவை ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற இளைஞர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் அரசு பள்ளிகளில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட விருப்பதாகவும், அதுவரைக்கும் தற்காலிக ஏற்பாடாக 5154 பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளிட்ட 14 ஆயிரத்து 19 ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

15 மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்னும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. இளைய தலைமுறையினருக்கு கல்வி வழங்க அரசு பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். ஆனால், நியமனங்களை தள்ளிப் போடுவதன் மூலம் அவர்களுக்கான ஊதியச் செலவை மிச்சப்படுத்தலாம் என்று திட்டமிடுகிறது திராவிட மாடல் அரசு. கல்விச்செலவை மிச்சப்படுத்த நினைக்கும் இந்த அரசு எப்படி மக்கள் நலன் காக்கும் அரசாக இருக்க முடியும்?

இத்தகைய சூழலில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், கடந்த பிப்ரவரி 4ஆம் தேதி நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக் கையை 8 ஆயிரமாக உயர்த்த வேண்டும். அவர்களுக்கு புத் தாண்டுக்குள் பணி நியமன ஆணைகளை அரசு வழங்க வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

## "மனதில் பட்டதைப் பேசிவிடும் பண்புக்குச் சொந்தக்காரர்" ஈவிகேஎஸ் இளங்கோவனுக்கு முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி



சென்னை, டிச.15

"ஈவிகேஎஸ் இளங்கோவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல், அவரது மகனையும், மருத்துவர்களையும் தொடர்புகொண்டு, அவரது உடல்நலன் குறித்த தகவல்களை அவ்வப்போது அறிந்து வந்தேன். இந்நிலையில், இன்று காலை அவரது உடல்நலனில் பின்னடைவு ஏற்பட்ட செய்தியும் அதனைத் தொடர்ந்து அவர் மறைவுற்றார் என்ற செய்தியும் வந்தடைந்தது. அவரது மறைவு அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் மிகவும் வேதனையை ஏற்படுத்துகிறது." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "தமிழ்நாடு காங் கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும் ஈரோடு கிழக்கு சட்ட மன்ற உறுப்பினருமான ஈவிகேஎஸ் இளங்கோவனின் மறைவால் மிகுந்த வேதனை அடைகிறேன். தந்தை பெரியார், சொல்லின் செல்வர் ஈவிகே.சம்பத் என மிகப்பெரும் அரசியல் பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சேர்ந்த நண்பர் இளங்கோவன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சர் என்று பல்வேறு நிலைகளில் பொதுவாழ்க்கைப் பணிகளைத் திறம்பட ஆற்றியவர். எப்போதும் தன் மனதில் பட்டதைப் பேசி விடக் கூடிய பண்புக்குச் சொந்தக்காரர்.

அவரது அன்பு மகனும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான திருமகன் ஈவெரா இழந்ததில் இருந்தே நண்பர் இளங்கோவன் மனதளவில் மிகவும் உடைந்து போயிருந்தார். எனினும், இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்று, தன் கவலைகளை மீறி மக்கள் பணி யாற்றி வந்தார். என்னை எப்போது சந்திக்க வந்தாலும், "உடம்ப பாத்துக்கோங்க" என்று அவர் அக்கறையுடன் சொல்லத் தவறியதே இல்லை. அவ்வாறு அவர் அன்பொழுகச் சொல்லும் போதெல்லாம் "நீங்க உங்க உடம்ப பாத்துக்கோங்க" என நானும் அவரிடம் சொல்வேன். அதற்கு அவர், "நீங்கள் என்னிடம் ஒப்படைத்த மக்கள் பணியை ஏற்ற பிறகு இன்னும் சுறுசுறுப்புடன் பணியாற்றுகிறேன். நிறைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறேன். நலமாக இருக்கிறேன்." என்று உற்சாகம் ததும்பக் கூறி என்னைச் சமாதானப்படுத்துவார்.

சட்டமன்றத்தில் சந்திக்கும் போதும், நமது திராவிட மாடல் அரசின் திட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு மக்களிடையே உள்ள ஆதரவையும் என்னிடம் தெரிவித்துப் பாராட்டுவார். அவர் உடல்நலம் குன்றி மருத்துவமனைக்குப் போகும் நிலையிலும் தனது துணைவியாரிடம், என்னைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அதை அறிந்து அவரை நான் சந்தித்தபோது, அவர் பேசும் நிலையில் இல்லை. இருந்தபோதும் அவர் என்னிடம் என்ன சொல்ல நினைத்தார் என்பதை உணர்ந்தவனாகவே நான் இருந்தேன்.

அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல், அவரது மகனையும், மருத்துவர்களையும் தொடர்புகொண்டு, அவரது உடல்நலன் குறித்த தகவல்களை அவ்வப்போது அறிந்து வந்தேன். இந்நிலையில், இன்று காலை அவரது உடல்நலனில் பின்னடைவு ஏற்பட்ட செய்தியும் அதனைத் தொடர்ந்து அவர் மறைவுற்றார் என்ற செய்தியும் வந்தடைந்தது. அவரது மறைவு அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் மிகவும் வேதனையை ஏற்படுத்துகிறது.

பல ஆண்டுகள் தமிழக அரசியலில் முன்னணித் தலைவராக விளங்கி, நீண்டகாலம் மக்கள் பணியாற்றிய அவரது இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் தோழர்களுக்கும், ஈரோடு கிழக்கு தொகுதி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் சிறுபான்மையினர் என்ற பாகுபாடு கிடையாது மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு



புதுடெல்லி, டிச.15

இந்தியாவில் சிறுபான்மையினர் பாகுபாடாக நடத்தப்படுவது கிடையாது என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்ட விவாதத்தை மக்களவையில் தொடங்கிவைத்து உரையாற்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, "நமது அரசியலமைப்பு உலகின் மிகப்பெரிய அரசியலமைப்பு மட்டுமல்ல, உலகின் மிக அழகான அரசியலமைப்பும் கூட. ஆனால் இங்கே ஒரு கதை உருவாக்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள கொள்கை பகுப்பாய்வு மையத்தின் கணக்கெடுப்பின்படி, ஐரோப்பிய ஒன்றியத்தில் 48% மக்கள் பாகுபாட்டிற்கு ஆளாகியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாமியர்கள்.

பிரான்சில், முஸ்லிம்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுவதாக பல அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் பெரும்பாலானவை, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தலையில் முக்காடு அல்லது பர்தா அணிந்து சென்றால் அதற்கு மற்றவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்பது தான். இதன்மூலம் முஸ்லிம்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதாக அந்த அறிக்கைகள் கூறுகின்றன. ஸ்பெயினில் முஸ்லீம்களுக்கு எதிரான உள்நாட்டு வெறுப்பு குற்றங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது. இதுவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் சிறுபான்மையினரின் நிலை, வங்கதேசத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக என்ன நடந்தது குறிப்பாக அங்கு இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிராக என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். திபெத், மியான்மர், இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குமுறை அல்லது ஏதேனும் பிரச்சினை எழுந்தால், அவர்கள் முதலில் பாதுகாப்பு கோரும் நாடு இந்தியாதான். ஆப்கானிஸ்தானில் உள்ள சீக்கியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்களின் மக்கள்தொகையின் நிலை என்ன என்பது நமக்கு தெரியும். அவ்வாறு இருக்க, இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு இல்லை என்று ஏன் சொல்லப்படுகிறது. நாட்டின் நன்மதிப்பை பாதிக்கும் இதுபோன்ற விஷயங்களில் கவனமாகப் பேச வேண்டும். இதை நான் எந்த ஒரு கட்சிக்காகவும் கூறவில்லை. இதை நான் நாட்டுக்காகவே சொல்கிறேன்.

உலகின் பிற பகுதிகளில் உள்ள சிறுபான்மையினருக்கு வாக்களிக்கும் உரிமை எவ்வாறு இருக்கிறது என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு அனைவருக்கும் சம உரிமையை இந்தியா உறுதி செய்தது. இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடு இல்லை. ஜனநாயகத்தில் இந்தியாவுடன் யாராலும் போட்டியிட முடியாது." என தெரிவித்தார்.

## 'டெல்லி சலோ' யாத்திரையை மீண்டும் தொடங்கும் விவசாயிகள்; ஹரியானாவில் இணைய சேவை துண்டிப்பு



சண்டீகர், டிச.15

விவசாய பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் தங்களின் டெல்லி நோக்கி 101 பேர் செல்லும் ஜோடி யாத்திரையை இன்று மதியம் மீண்டும் தொடங்குகின்றனர். இதனை முன்னிட்டு ஹரியானா அரசு அம்மாநிலத்தின் அம்பலா மாவட்டத்தின் 12 கிராமங்களில் டிசம்பர் 17ம் தேதி வரை இணைய சேவை, மொத்தமாக குறுஞ்செய்தி அனுப்பும் சேவையை தடைசெய்துள்ளது.

கிஷான் மஸ்தூர் மோர்சா (கேஎம்எம்) தலைவர் சர்வான் சிங் பந்தேர், சனிக்கிழமை விவசாயிகள் குழு டெல்லி நோக்கிச் செல்லும் என்று தெரிவித்திருந்தார். டிசம்பர் 6ம் தேதியில் இருந்து தலைநகர் டெல்லி நோக்கி பேரணி செல்வதற்கு விவசாயிகள் மேற்கொள்ளும் மூன்றாவது முயற்சி இதுவாகும். முன்னதாக டிசம்பர் 6 மற்றும் 8ம் தேதி என இரண்டு முறை விவசாயிகள் டெல்லி செல்ல முயன்றனர். என்றாலும் அவர்கள் ஹரியானா போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு பேரணி செல்ல அனுமதிக்கப்படவில்லை.

டெல்லி நோக்கி செல்லும் விவசாயிகளை தடுத்துநிறுத்துவதற்காக ஹரியானா எல்லையில் அம்மாநில போலீஸார் பல அடுக்கு தடுப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். இதனிடையே, ஹரியானா மாநில கூடுதல் தலைமைச் செயலாளார் (உள்துறை), பொது அமைதியைக் காக்கும் படிக்கு, இணைய சேவை மற்றும் மொத்த மாக குறுஞ்செய்தி அனுப்பும் சேவைகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அம்பலா மாவட்டத்தில் ஏற்கெனவே பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 163ன் படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஐந்து பேர் அல்லது அதற்கு மேல் குழு வாக கூடுவது தடைசெய்யப் பட்டுள்ளது.

டெல்லி நிர்வாகத்திடம் அனுமதி பெற்ற பின்பு விவசாயிகள் டெல்லி நோக்கி பேரணியாக செல்லாம் என்று ஹரியானா போலீஸார் ஏற்கனவே தெரிவித்துள்ளனர்.

சம்யுக்தா கிஷான் மோர்சா (அரசியலற்றது) மற்றும் கேஎம்எம் போன்ற விவசாய அமைப்புகளின் தலைமையின் கீழ், பயிர்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றன. மேலும் மத்திய அரசு இதுதொடர்பாக மத்திய அரசு தங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

இதனிடையே கனவுரி எல்லைக்கு அருகே சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் விவசாயத் தலைவர் ஜக்ஜித் சிங் தல்லாவாலின் உண்ணாவிரதம் இன்று 19வது நாளை எட்டியுள்ளது. நீண்ட நாட்களாக உண்ணாவிரதம் இருந்துவருவதால் அவரின் உடல்பலவீனமடைந்துள்ளதால் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட வேண்டம் என மருத்துவர்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளனர்.

என்றாலும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் தல்லாவாலினைச் சுற்றி பாதுகாப்பு வளையம் போல் அமைத்துள்ளதால், மாநில அதிகாரிகளால் அவரை நெருங்கி அங்கிருந்து வெளியேற்ற முடியவில்லை. முன்னதாக அவர் உண்ணாவிரதம் தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர், நவம்பர் 26ம் தேதி அவரை போலீஸார் போராட்டம் நடக்கும் இடத்தில் இருந்து வெளியேற்றியுள்ளனர்.

தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லி நோக்கி பேரணி சென்ற விவசாயிகள் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில எல்லைகளான ஷம்பு மற்றும் கனவுரி ஆகிய இடங்களில் தடுத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிப்ரவரி 13ம் தேதி முதல் விவசாயிகள் அங்கு முகாமிட்டு போராடி வருகின்றனர்.

# கோவையில் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் சூர்யா 45 படத்தின் படப்பிடிப்பு பணிகள்

கோவை டிச15

மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் திரிஷா நடித்த குந்தவை கதா பாத்திரம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. தமிழ் திரை உலகில் 22 ஆண்டு களாக தனக்கென தனிரசிகர்கள் பட்டாளத்தை கொண்டவர் இவர் தற்போது அஜித்துடன் 'விடாமுயற்சி, குட் பேட் அக்லி' மற்றும் கமலின் 'தக் லைப்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.



தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கில் நடிகர் சிரஞ்சீவி யுடன் 'விஸ்வம்பரா' படத்தி லும், மலையாளத்தில் இரண்டு படங்களிலும் நடித்து வருகிறார். இதற்கிடையில், ஆர்.ஜே. பாலாஜி நடிகர் சூர்யாவை வைத்து இயக்கி வரும் 'சூர்யா 45' படத்தில் நடிகை திரிஷா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதனை உறுதி படத்தும் விதமாக தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வ அறி விப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கு பிறகு சூர்யா மற்றும் திரிஷா இணைந்து நடிப்பதால் இப்படத்தின் மீது ரசிகர்களுக்கு கூடுதல் எதிர்ப்பார்ப்பு உருவாகியுள்ளது. இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளார். இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் கோயம்புத்தூர் பகுதியில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மேலாய்க்குடி கிராமத்தில் கடந்த 13 ஆம் தேதி பெய்த தொடர் மழையால் பால்ராஜ்விஜயலெட்சுமி அவர்களின் வீட்டின் மண் சுவர் இடிந்து அவர்களது குழந்தை கீர்த்திகா இறந்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், நிவாரண உதவித்தொகையாக ரூ.4,00,000/க்கான காசோலையினை இறந்த குழந்தையின் பெற்றோர்களிடம் வழங்கி ஆறுதல் கூறினார். உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் பரமக்குடி சார் ஆட்சியர் அபிலாஷா கௌர் உதவி ஆட்சியர் (பயிற்சி) முகமது இர்பான்ஆகியோர் உள்ளனர்.



காரைக்குடி கழனி வாசல் பகுதியில் நேற்று காலை முதலே தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட கழனி வாசல் கோடீஸ்வரர் நகர் அருகில் மின்கம்பத்தின் மீது வேப்பமரம் சாய்ந்து விழுந்தது இதனால் அப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது.கீழே விழுந்த மின்கம்பத்தை மின்சாரத்துணைீற ஊழியர்கள் மழையில் நனைந்தபடி சரி செய்து வருகின்றனர்



மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூர் கிராமத்தில் அருள்மிகு ஆழிமணிகண்டேஸ்வரர் ஆலய அறங்காவலர் குழுவினர் தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் கணபதி முருகன் மற்றும் அறங்காவலர் ஏ.ஆர்.ஜெயமூர்த்தி ஆகியோர் புதிய நான்கு உறுப்பினர்களுக்கு உறுதிமொழி பதவி பிரமாணம் செய்து வைத்தனர்.இந்த நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகநாதன், அரசு வழக்கறிஞர் முத்துராமலிங்கம், அறங்காவலர் கார்த்திக் உட்பட பலர் பங்கேற்றனர்...




சிவகங்கை மாவட்டம் நேரு யுவகேந்திரா மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான இளையோர் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு திறன் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பதக்கம் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை தேவகோட்டை ஆனந்த கலைக் கல்லூரியில் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் வழங்கினார்.உடன் காரைக்குடி எம்எல்ஏ,நேரு யுவகேந்திரா மாநில இயக்குநர் செந்தில் குமார், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் செந்தில்நாதன்,நேரு யுவகேந்திரா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரவீன் குமார், ஆனந்தா கலைக்கல்லூரி முதல்வர் ஜான் வசந்தகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்..

# சிவகங்கை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் சார்பில், மதுவிலக்கு மற்றும் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நெடுந்தூர ஓட்டப்போட்டி

சிவகங்கை டிச15





சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் சார்பில், மதுவிலக்கு மற்றும் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியினை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், கொடியசைத்து துவக்கிவைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம், பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவிற்கிணங்க, மதுவிலக்கு மற்றும் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, தமிழகம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் சார்பில், "மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச் சாரம் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்துடன், போதை பொருள்களை தவறான பயன்பாட்டிற்கு பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை களின் ஒரு பகுதியாக பள்ளி / கல்லூரி மாணவ / மாணவி யர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்துகொள்ளும், நெடுந்தூர ஓட்டப்போட்டி (Marathon) இன்றைய தினம் சிறப்பாக நடைபெற்றது.

கடந்தாண்டும் டிசம்பர் மாதத்தில் இதேபோன்று நெடுந்தூர ஓட்டப்போட்டி யானது (Marathon) முதன் முறையாக மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் ஆண் டாக இப்போட்டியானது இன்றைய தினம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந் நிகழ்விற்கு மேலும் சிறப்பு சேர்க்கின்ற பொருட்டு, விழப்புணர்வு உறுதிமொழியும் அனைவராலும் ஏற்கப்பட் டுள்ளது. இவ்வகையான நிகழ்வுகள் அனைத்தும் பொது மக்களிடையே மது விலக்கு மற்றும் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நோக்கமே ஆகும். இதுபோன்று மாவட்டமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வுநிகழ்வுகள் பொது மக்களிடையே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இன்றைய தினம் நடைபெற்றுள்ள விழிப்பு ணர்வு நெடுந்தூர ஓட்டப் போட்டியானது (Marathon) மொத்தம் 5 கி.மீ தூரம் வரையில் நிர்ணயிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, திருப்பத்தூர் சாலை, கோர்ட் வாசல், சிவகங்கை தாலுகா அலுவலகம், LIC, புதிய நீதிமன்றம், மகளிர் கல்லூரி, மற்றும் திருப்பத்தூர் சாலை வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலக உள்வட்டபாதையில் மின்வாரிய அலுவலகம் வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பிரதான கட்டிட வாசல் முன்பு நிறை வடைந்துள்ளது.

இப்போட்டியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், குறிப்பாக முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், ஆகியோர் கலந்து கொண்டு, இப்போட்டிக்கு சிறப்பு சேர்த் துள்ளனர். மொத்தம் 600க்கும் மேற்பட்டோர் இப்போட்டியில் கலந்து கொண்டுள்ளனர்.

அதில், முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற 1418 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 1830 வயதிற்குட்பட்ட வர்களுக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவினருக்கு முதல் பரிசாக ரூ.10,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 7,000/ மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/மும் மற்றும்

சிறப்பு பரிசாக முதி யோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.1,000/மும் பரிசுத்தொகை, பதக்கம் (medal), கேடயம் மற்றும் சான்றிதழ்களும் வழங் கப்பட்டுள்ளது. அதுமட்டு மன்றி, போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து பங்கேற் பாளர்களுக்கும் Appreciation Certificate ஆன்லைன் வாயிலாகவே பெற்றுக்கொள்ளும் வகையில், உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விழிப்பு ணர்வு ஏற்படுத்திடும் நோக்கில், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும், இதுபோன்ற பல்வேறு விழிப்புணர்வுநடவடிக்கைகளை அனைவரும் கருத்தில் கொண்டு, முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரி வித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. செல்வசுரபிசிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், உதவி ஆணையர் (கலால்) ஆர்.ரெங்கநாதன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலைக்கதிரவன், துணை காவல் கண்காணிப்பாளர்கள் (சிவகங்கை) அமல அட்வின், கோட்ட கலால் அலுவலர் ரெத்தினவேல் பாண்டியன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன், சிவகங்கை வட்டாட்சியர் சிவராமன், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், தன்னார்வலர்கள், மாற்றுத்திற னாளிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கும்பகோணத்தில் மேக்சிவிஷன் 48 வது சூப்பர் ஸ்பெஷாலிட்டி கண்மருத்துவமனை தொடக்கம்

கும்பகோணம், டிச 15

கும்பகோணத்தில் 7000 சதுர அடியில் மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கண் அதிநவீன மருத்துவமனை தொடங்கியது.



மதுரை, தஞ்சை, பெரம்பலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழு வதும் மேம்பட்ட கண் சிகிச் சையை வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை இந்தச் கண் மருத்துவமனை சேர்க்கை யுடன், மேக்சிவிஷன் வலுப் படுத்துகிறது.

தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மருத்துவ மனையைதிறந்து வைத்தார். கும்பகோணம் தொகுதி எம்எல்ஏ க. அன்பழகன், துணை மேயர் சுப. தமிழழகன், வி.எஸ். சுதீர், மேக்சிவிஷன் குழும தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் டாக்டர் ஷிபு வர்க்கி, மருத்துவ இயக்குனர் மற்றும் அறுவைசிகிச்சை நிபுணர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசுடன் இணைந்து 'புராஜெக்ட் வெளிச் சம்' திட்டத்தின் கீழ் அமைப்பின் தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாக கட்டப்பட்ட இந்த புதிய மருத்துவமனையில், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் அதிக அனுபவம் வாய்ந்த கண் மருத்துவர்களைக் கொண்ட குழுவைக் கொண்டு கண்புரை மற்றும் ஒளிவிலகல் பிழைகளுக்கு சிகிச்சையளிக்க மேம்பட்ட ரோபோடிக் தொழில் நுட்பங்கள் உட்பட, சமீபத்திய பார்வை கண்டறியும் கருவிகள் மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கண் பராமரிப்பு அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்களை வழங்குகிறது. மருத்துவ மனையில் 2 ஆபரேஷன் தியேட்டர்கள், 6க்கும் மேற்பட்ட ஆலோசனை அறைகள் ,மருந்தகம், ரூ.150 முதல் ரூ. 15000 வரையிலான பிரேம்க ளுடன் கூடிய ஆப்டிகல் ஸ்டோர் கொண்டுள்ளது.

மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கண் மருத்துவ மனைகளின் தலைவர் டாக்டர் ஜி.எஸ்.கே.வேலு பேசுகையில், "கும்பகோணத்தில் உள்ள எங்களின் புதிய மருத்துவமனை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலை யிலும் சிறந்த கண் சிகிச்சையை அணுகுவதற்கான மேக்சிவிஷ னின் உறுதிப்பாட்டை பிரதிபலிக் கிறது. 2025 ஆம் ஆண்டுக்குள், கண் சிகிச்சைக்கான அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நாடு முழுவதும் 100 மருத்துவமனைகளை அடைய நாங்கள் உறுதியாக இருக்கிறோம்."

மருத்துவமனையின் குரூப் சிஇஓ வி.எஸ்.சுதீர் மேலும் கூறு கையில், "2022ல் திருச்சியில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத் துவமனையை தொடங்கி னோம், இன்று இந்த வசதி ஒரு நாளைக்கு 200க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு வழங்குகிறது. பின்னர் தஞ்சை, பெரம்பலூர், சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத் துவமனைகளை தொடங்கி னோம், அடுத்த 6 மாதங் களில் தமிழகத்தின் கிராமப் புறங்களில், மயிலாடுதுறை, மணப்பாறை மற்றும் புதுக் கோட்டையில் பார்வை மையங்களைத் திட்டமிடுகி றோம். உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தை வழங்கும் எங்களின் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் விரைவில் சென் னையில் தொடங்கப்படும்.

மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கண் மருத்துவ மனைகள், 1996 இல் டாக்டர். காசு பிரசாத் ரெட்டியால் நிறுவப்பட்டு, 2011 இல் டாக்டர் ஜி.எஸ்.கே.வேலுவால் கையகப்படுத்தப்பட்டது, 6 மில்லியனுக்கும் அதிகமான நோயாளிகளுக்கு சேவை செய்த பெருமைக்குரியது.

# தமிழகத்தில் புதிய கலோரி ஃப்ரீ சர்க்கரை "ஸ்டீவியா" அறிமுகம்

மதுரை, டிச 15



தமிழகத்தில் "ஸ்டீவியா" என்ற புதிய கலோரி ஃப்ரீ சர்க்கரை அறிமுகப் படுத்தப் பட உள்ளது. இது பற்றி மதுரையில் நடந்த செய்தியா ளர்கள் சந்திப்பில், இண்டர் நேஷனல் ஸ்டீவியா அக்ரிகல்ச் சரல் ரிசர்ச் டிரஸ்ட் நிர்வாகி முத்துகிருஷ்ணன்.ஜெ கூறிய தாவது, தமிழகத்தில் புதிய இனிப்பு புரட்சியாக ஸ்டீவியா என்ற கலோரி ஃப்ரீ சர்க்கரையை அறிமுகப்படுத்துகிறோம். இது தற்போது அமெரிக்கா, ஜெர்மனி இங்கிலாந்து போன்ற வெளி நாடுகளில் அதிகமாக பயன்படுத்தப் படுகிறது. இந்த புதிய கலோரி ஃப்ரீ சர்க்கரை ஸ்டீவியா என்ற செடியின் இலையில் இருந்து தயார் செய்யப்படுகிறது. இந்தச் செடியின் விதைகள் வெளி நாட்டில் இருந்து தருவிக்கப்பட்டு, தமிழகத்தில் பயிர் செய்து இந்த புதிய கலோரி ஃப்ரீ சர்க்கரை உருவாக்க உள்ளோம்.

இது பற்றிய ஸ்டீவியா உச்சி மாநாடு2025 கண்காட்சி மற்றும் மாநாடு வருகிற ஜனவரி 24 மற்றும் 25 தேதிகளில் சென்னை அண்ணா யுனிவர் சிட்டி விவேகானந்தா ஆடிட் டோரியத்தில் நடைபெற உள்ளது இதில் இந்தியா முழுவ திலும் இருந்து ஏராளமான தொழில் முனைவோர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

மத்திய அரசின் மேக் இன் இந்தியா திட்டத்தின் மூலம் இதை ஊக்கப்படுத்தி செயல்படுத்த உள்ளனர். இதன் மூலம் ஒரு புதிய இனிப்பு புரட்சியை ஏற்படுத்த முடியும் என்று கூறினார்.

# ஆற்று கரையோரம் வசிக்கும் பொது மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுவித்த கொடைக்கானல் கோட்டாட்சியர்

கொடைக்கானல், டிச.15

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் தொடர் மலை பெய்து வருகிறது . கன மழையினால் காரணமாக கொடைக்கானல் ஏரியிலிருந்து உபரி நீர் அதிகளவு வெளியேறி வருகின்றன. மேலும் இதன்காரணமாக ஏரி சாலையில் இருந்து,

எரிச்சாலையில் இருந்து வெள்ளி நீர்வீழ்ச்சி பகுதி வரைக்கும் சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவு வரை ஆற்றுப்பகுதியில் அருகே குடியிருக்கும் பொது மக்களை அரசு பள்ளிக்கூடங்களில் தங்கிக் கொள்ளலாம் என்று ஒலிபெருக்கி மூலம் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் அரசு விளையாட்டு மைதானத்தின் அருகாமையில் உள்ள டோபிக் கானல், தெரசா நகர் ஆகிய பகுதிகள் அதிகம் பாதிக்கும்



இடமாக கருதப்பட்டு. கொடைக் கானல் நகராட்சி ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் கோட்டாட்சியர், வட்டாட்சியர் ,கிராம அலுவலர்கள் நேரில் சென்று பார்வையிட்டு அப்பகுதி மக்களிடம் நகராட்சி அதிகாரிகள் உங்கள் நலன் கருதி நாங்கள் உங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு கொடைக்கானலில் அரசு கட்டிடங்கள் அரசு பள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மேலும் அதிக வெள்ள நீர் வருவதாகவும் அதனால் உடனடியாக ஒதுக்க பட்ட இடத்திற்கு செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தி வருகின்றனர்.



கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த 3 நாட்களாக இடைவிடாமல் தொடரும் மழையால் வில்பட்டி பிரதான மலைச்சாலையில் வில்பட்டி பிரிவு அருகே மண் சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், எம்எல்ஏ நேற்று தனது ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், புதிய கூடுதல் வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பூமி பூஜையில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, அடிக்கல் நாட்டி,கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார்.

# நாகர்கோவில் வசந்தம் மருத்துவமனை மருத்துவமனை முன்பு நோயாளி தர்ணா

நாகர்கோவில், டிச.15

நாகர்கோவில் வசந்தம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இருளப்புரம் பகுதியை சேர்ந்த முனியாண்டி என்ற நோயாளிக்கு முறையான சிகிச்சை அளிக்காமல் ஆக்ஸிஜன் மட்டும் செலுத்திவிட்டு 70000 ரூபாய் பணத்தை கட்டினால் மட்டுமே வெளியே விடுவோம் என கூறியதாகவும் அந்த பணத்தையும் கட்டிய பிறகும் இன்னும் மூன்றா யிரம் ரூபாய் கட்டினால் மட்டுமே வெளியே நோயாளியை விடுவோம் என கூறி மிரட்டியதால் நோயாளி முனியாண்டி மற்றும் அவரது குடும்பத்தார் மருத்துவமனை முன்பு தர்ணா




போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது போலிசார் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நேற்று முன்தினம் இரவு செம்மன் மேடு பகுதியில் மழையால் ஏற்பட்ட பாதிப்பினை பார்வையிட்டனர் நகர் மன்ற தனவர் பா.செல்லத்துரை நகர்மன்ற துணைத்தலைவர் மாயக்கண்ணன் மாவட்ட பிரதிநிதி இளங்கோவன் உடன் இருந்தனர்.

# இராமநாதபுரத்தில் ஓய்வூதிய பரிந்துரையை களஞ்சியம் செயலியில் அனுப்புவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

இராமநாதபுரம்,டிச.14:

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கருவூலத்துறை சார்பில், ஓய்வூதிய பரிந்துரையை களஞ்சியம் செயலியில் அனுப்ப அறிவுறுத்தல் தொடர்பான அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில், வரும் நாட்களில் ஓய்வூதியம் முன்மொழிவுகளை மாநில முதன்மை கணக்காயர், சென்னை அலுவலகத்திற்கு களஞ்சியம் 2.0 தளத்தின் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டியவற்றை டிசம்பர் 31ம் தேதிக்குள் களஞ்சியம் செயலியில்



அனுப்ப வேண்டும். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வருமான வரி தொடர்பான கோப்புகளை சரி செய்து கருவூல அலுவலரிடம் அளிக்க வேண்டும். மேலும் விடுபட்ட அல்லது தவறுதலாக உள்ள மின்கட்டண இணைப்புகளை சரிசெய்து பதிவேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட கருவூல அலுவலர் சண்முக சுந்தரி,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பிரபாகர்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) கல்யாண சுந்தரம் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# தொடர்மழை! வாகன ஓட்டிகள் மலைச்சாலைகளில் இரவு நேர பயணத்தை தவிர்க்க தேனி மாவட்ட ஆட்சியர் அறிவுரை

தேனி, டிச.15

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தேனி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியாக கன மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு,

பொதுமக்களுக்கு தேவையான எச்சரிக்கை விழிப்புணர்வும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு



குமுளி மலைப்பாதை, கம்பம் மெட்டு போடிமெட்டு, மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளுக்கு செல்லும் சாலையில் மரம் முறிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, இவ்வழியாக பயணம் மேற்கொள்ளும் வாகன ஓட்டிகள் மற்றும் சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் முடிந்த வரை இரவுநேர பயணத்தை தவிர்க்க வேண்டும்.

பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடனும், பாதுகாப்புடனும் இருப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி மாநகருக்குள் வெள்ள நீர் வருமா? மேயர் விளக்கம்

தூத்துக்குடி, டிச.15

தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை கொட்டித் தீர்த்தது வருகிறது. தாமிரபரணி ஆறு, காட்டாறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பல இடங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகரில் கடந்த சில நாட்களாக மழை பெய்த நிலையில், மழையானது நிற்காமல் தொடர்ந்து பெய்து வருவதால், தூத்துக்குடி புறநகர் பகுதியில் மழை நீர் வரத்து அதிகமாகி கொண்டே வருகிறது. இதனால், தூத்துக்குடி மாநகரில் வெள்ளம் ஏற்படுமா? என்ற கேள்விகளுடன் பொதுமக்கள் அச்சம் அடையக்கூடிய



சூழல் ஏற்பட்ட நிலையில், இது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதில், தூத்துக்கடி மாநகராட்சி 16, 17, 18 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். தூத்துக்குடி மாநகரின் புறநகர் பகுதிகளான மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து வரும் மழை நீரானது பக்கிள் ஓடை வழியாகவே சென்று கொண்டிருக்கிறது. ஆகையால் அந்த மழை நீரின் அளவு குறைந்தவுடன் இந்த குறிப்பிட்ட வார்டுகளில் தேங்கி உள்ள மழைநீரானது அந்த பகுதிகளிலுள்ள வடிகால்களின் வழியாக பக்கிள் ஓடையை சென்று அந்தப் பகுதியில் தேங்கியுள்ள மழை நீரானது படிப்படியாக குறையும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பக்கிள் ஓடையின் முகத்துவாரமான திரேஸ்வரத்தில் எந்த தடையும் இல்லாமல் தற்போது வரை நீர் சென்று கொண்டிருக்கின்றது. என தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் பாதிக்கப்பட்டு தற்காலிக நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆலங்குடி சட்டமன்ற தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மாத்தூர் ராமசாமி புரம் பகுதி மக்களை பிற்படுத்தப்பட்ட துறை அமைச்சர் சிவ வி மெய்ய நாதன் சந்தித்து அவர்களுக்கு தனது சொந்த செலவில் பொதுமக்களுக்கு உணவு மற்றும் ஏற்பாடுகளை செய்து பொது மக்களின் குறைகளை கேட்டறிந்தார் இந்நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர் சண்முகநாதன் மற்றும் திமுக முக்கிய நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் என பல்வேறு நபர்கள் இருந்தனர்

# மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கி தேனியில் 8 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்பட முடியாத நிலை

தேனி, டிச.15

மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால், ஓரிரு நாட்களுக்கு உப்பார் பட்டி ஊராட்சி மற்றும் உப்பார்பட்டியில் அமைந்துள்ள கோவிந்தநகரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம், குடிநீர் விநியோகிக்கப்படும் 8 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்பட முடியாத நிலை உள்ளது.

நமது உப்பார்பட்டி ஊராட்சியின் குடிநீர் தேவைக்காக ஆற்றில் தனி உறை கிணறு உள்ளது. அதில் இருந்து ஆற்றின் தரை வழியாக ஆற்றங்கரை வரை பதிக்கப்பட்ட உழுவரை பைப்லைன் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில்



சேதமடைந்துவிட்டது. அதற்கு மாற்றாக, ஆற்றுக்கு மேல் வழியாக கருப்பு பைப் மூலம் உரை கிணற்றிலிருந்து ஆற்றங்கரை வரை பைப்லைன் அமைக்கப்பட்டு குடிநீர் கொண்டு வரப்படுகிறது.


அதனைத் தொடர்ந்து, எப்போதெல்லாம் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் இந்த கருப்பு பைப் சேதமடைந்து விடுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கிலும் இந்த கருப்பு பைப் சேதமடைந்து விட்டது.

பொதுவாக இப்படி பிரச்சினை ஏற்படும் போது, உப்பார்பட்டியில் அமைந்துள்ள கோவிந்தநகரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கும் இரண்டு உறை கிணறுகளின் மூலம் உப்பார்பட்டி ஊராட்சிக்கு குடிநீர் வழங்கப்படும். ஆனால், நேற்று முன்தினம் (13.12.2024) மதியம் இரண்டு மணி முதல் அந்த இரண்டு உறை கிணறும் வெள்ளப் பெருக்கினால் தண்ணீரில் மூழ்கி உள்ளதால், மோட்டாரை இயக்க முடியாத நிலை ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.


எனவே, இன்னும் குறைந்தது ஓரிரு நாட்களுக்கு நமது உப்பார்பட்டி ஊராட்சி மற்றும் உப்பார்பட்டியில் அமைந்துள்ள கோவிந்தநகரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் 8 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்பட முடியாத நிலை உள்ளது என்பதை உப்பார்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பொ. சோமசுந்தரம் பகுதி மக்களுக்காக தெரிவித்துள்ளார்.



நெல்லை மாவட்டம் முக்கூடல் வட்டார பகுதிகளில் கடந்த இரண்டு தினங்களாக கன மழை பெய்து வருகிறது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது குறிப்பாக பாப்பாக்குடி காவல் நிலைய முன்பகுதி முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் விபத்து தவிர்க்கப்பட்டது



நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக மாவட்டத்தில் உள்ள முக்கிய அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. நேற்று ஒரே நாளில் சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 28 அடி உயர்ந்து தற்போது 125 அடியாக உள்ளது. அதேபோல் முக்கிய அணையான பாபநாசம் அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து தற்பொழுது 84 அடியாக உள்ளது மணிமுத்தாறு அணை நான்கடி உயர்ந்து தற்பொழுது 91.68 அடியாக நீர்நிலை உயர்ந்துள்ளது இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.



ஈரோடு மாவட்டம் அரச்சலூர் உள்ள நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் இயற்பியல் துறையின் சார்பாக இணைய வழி ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிலரங்கம் நிறைவு பெற்றது. நிறைவு விழாவிற்கு தி நவரசம் அகாடமி பள்ளியின் செயலாளர் அருண் கார்த்திக் நன்றியுரை நல்களுடன் விழா இனிதே நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.கலைச்செல்வி, இணை ஒருங்கிணைப்பாளர் செல்வி பிளஸ்ஸிமோல் நிறைவு உரை வழங்கினர்.

# வத்தலகுண்டு தங்கம் மலை முருகன் கோவிலில் ஏற்றப்பட்ட கார்த்திகை தீபம்-சொக்கப்பனை

வத்தலகுண்டு டிச.15



திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு தங்கமலை முருகன் கோவிலில் கார்த்திகை தீபமும் சொக்கப்பனையும் மற்றும் புதிய தங்க மலை முருகன் திருவுருவ வருகையும் என முப்பெரும் விழா நடைபெற்றன திருக்கார்த்திகை தான் தமிழர்களின் தீபத்திருநாள் மழையை வழி அனுப்புவதற்காக தமிழர்களின் விளக்கேற்றி வழிபடுவதாக தொண்டு தொட்டு நடைபெற்று வரும் விழா இந்த கார்த்திகை தீபத்தன்று விளக்கேற்றி வழிபடுவதற்காக இவர்கள் தமிழர் பண்டிகையில் எல்லாம் பெரும்பாலும் முழு நிலவு நாட்களில் வரும் தைப்பூசம் பங்குனி உத்திரம் சித்ரா பௌர்ணமி திருக்கார்த்திகை பௌர்ணமி என முழு நிலவு நாட்களிலே கொண்டாடப்படும் விதமாக அமைந்துள்ளன கார்த்திகை தீபத்தன்று சொக்கப்பனை கொளுத்தும் நிகழ்ச்சிகள் அனைத்து கோவில்களிலும் நடக்கும் அதில் தங்கமலை முருகன் கோவிலில் சொக்கப்பனம் கொளுத்தும் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது தங்கமலை முருகன் மலை மீது அமர்ந்துள்ளது இது பற்றி கோவில் நிர்வாகம் தெரிவிக்கும் பொழுது தற்போது இந்த கோவிலுக்கு கட்டிடம் கட்டி புதிய திருமேனியை கொண்டு நிலை நாட்ட ரங்கமலை முருகன் திருமேனி கரூரில் உருவாக்கப்பட்டு வாகனம் வழியாக வத்தலகுண்டு வந்து காளியம்மன் கோவில் மயில் விநாயகர் கோவில் ஐயப்பன் கோவில் மாரியம்மன் கோவில் என முக்கிய கோவில்களில் வைத்து விசேஷ பூஜை முடித்து ஊர்வலமாக தங்கமலை முருகன் கோவில் சென்றடைந்தன அங்கு அவரை 48 நாட்கள் ஜலத்தில் வைத்து பூஜை செய்து பின் 28 நாட்கள் நெற் களஞ்சியத்தில் வைத்து பூஜை செய்து பின்னர் சொரணத்தில் வைத்து பூஜை செய்து பின்னே கும்பாபிஷேகம் செய்யப்படும் பக்தர்கள் கும்பாபிஷேக நிதி உதவி செய்போர் 87 78 78 77 60 மற்றும் 99 420 55 33 3 என்ற எண்ணிற்கு ஜிபி மூலம் நிதி உதவி செய்து முருகனை அருள் பலிக்க செய்யுமாறு கோவில் நிர்வாகி தெரிவித்தார் முருகன் கோவில் வந்து அடைந்ததும் கோவில் மலை மேல் சொக்கப்பனை கொளுத்தப்பட்டது அதில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர் விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் பக்தர்கள் என பலர் செய்திருந்தனர்

# சர்வதேச மகளிர் தின விழாவில் 2025ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல் டிச.15

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்த சேவை புரிந்தவருக்கு 2025 ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட உள்ளது. இவ்விருது பெறுபவருக்கு ரூ.1.50 இலட்சத் திற்கான காசோலை, பொன்னாடை மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேற்பாடி விருதிற்கு கீழ்கண்ட தகுதியான நபர்களிடம் இருந்து கருத்துருக்கள் வரவேற் கப்படுகிறது. தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in)




விண்ணப்பித்து கருத்துருவினை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 31.12.2024 மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்விருது பெற தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.• குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், சமூக சீர்திருத் தம், மகளிர் மேம்பாடு, மதநல் லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும். பெண்களுக்கான இச்சேவையை தவிர்த்து வேறு சமூக சேவைகள் இவ்விருதுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.• இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் சம்பந்தப் பட்ட மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு, கையேடாக தயார் செய்து தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சு செய்யப் பட்டு தலா 2 நகல்கள் அனுப்பிட வேண்டும் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மொ. நா.பூங்கொடி தெரிவித்துள்ளார்

# பவானி நகர,ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் கூட்டம்

ஈரோடு டிச.15




ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டம்,பவானி நகரம் மற்றும் வடக்கு,தெற்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் 12.12.2024 வியாழக்கிழமை தனியார் மண்டபத்தில் மாலை அன்றுகூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய முன்னாள் அமைச்சரும், ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளருமான கே.சி.கருப்பணன் பவானி சட்டமன்ற உறுப்பினர் சிறப்புரை ஆற்றினார். அவர் பேசுகையில்,அதிமுக ஆட்சியில் பவானி சட்டமன்ற தொகுதியில்,நகராட்சி, பேரூராட்சி ஊராட்சி இப்பகுதிகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தற்போது நகராட்சிப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் அம்ரூத் திட்டத்தால் ரோடுகள் தோண்டப்பட்டு, குண்டும்,குழியுமாக காட்சியளிக்கிறது. பொதுமக்களை சிரமப்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும்,விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு,சொத்து வரி உட்பட வரியினங்கள் உயர்வு தமிழக மக்களை பெரிதும் பாதித்துள்ளது எனப் பேசினார்.முன்னாள் எம்பி சிவசாமி,பேச்சாளர் கோபி காளிதாஸ் ஆகியோர் அதிமுக நிர்வாகிகள் வரும் சட்டமன்றத் தேர்தலில் செயல்படும் முறைகள்,வாக்குகள் சேகரிப்பு, திட்டமிடுதல் குறித்து விளக்கிப் பேசினர்.

பவானி ஒன்றிய செயலாளர் தங்கவேலு,பவானி ஒன்றிய குழுத் தலைவர் பூங்கோதை வரதராஜ்,நகர எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் எம்.ஜி.நாத் (எ) சி.மாதையன்,முன்னிலை வகித்தனர்.பவானி நகர அதிமுக செயலாளர் எம்.சீனி வாசன் வரவேற்றார். பொதுக் குழு உறுப்பினர் தட்சிணா மூர்த்தி,மாவட்ட கவுன்சிலர் விஸ்வநாதன், பவானி நகராட்சி வார்டு உறுப்பினர்கள், தொட்டிபாளையம் ஊராட்சி தலைவர் செல்வராஜ், முன்னாள் நகர மன்ற துணைத் தலைவர் ராஜேந்திரன்,ஈரோடு மண்டல இணைச் செயலாளர் தகவல் தொழில் நுட்ப பிரிவு கே.கே.வி. திருநாவுக்கரசு,மாவட்ட இளைஞர் பாசறைச் செயலாளர் பூக்கடை ஏ.பிரகாஷ், நகர செயலாளர் பிரபாகரன்,அண்ணா தொழில் சங்க துணைச் சயலாளர் குமார்,பேச்சாளர் கோதண்டராமன்,அதிமுக நிர்வாகிகள்,மகளிர் அணி,மாணவர் அணி ஏராளமான கலந்து கொண்டனர்.

# மனிதநேய ஜனநாயக கட்சியின் ஈரோடு கிழக்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம்

ஈரோடு டிச15




மனிதநேய ஜனநாயக கட்சியின் ஈரோடுகிழக்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம், மாவட்ட செயலாளர் எ.ஜாவித் ஃபஜல் தலைமையில், மாவட்ட அவை தலைவர் மு.முஹமது ஹாரிஸ் முன்னிலையில் நடைப்பெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற மஜக மாநிலதுணைச் செயலாளர் அந்தியூர் ஷாநவாஸ், மாநில துணைச் செயலாளர் ஈரோடு எக்சான் ஆகியோர் பங்கேற்று கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள்.

இதில், மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊர்களிலும் புதிய கிளை நிர்வாகத்தை அமைப்பது, மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் தீவிர உறுப்பினர் சேர்க்கை மற்றும் செயற்குழு, பொதுக்குழு நடத்துவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், ஈரோடு பூம்புகார் நகர் பகுதியில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பயிலும் மதரஸா செயல்பட்டு வருகிறது, அதன் அருகில் டாஸ்மாக் அரசு மதுபானக்கடை செயல்பட்டு வருகிறது, இதனால் டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டும்,

ஈரோடு சுற்றுவட்டார பகுதிகளில் செயல்படும் சாய, தோல் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற் றப்படும் சாய, தோல் கழிவுநீர், நீர்நிலைகளில் கலப்பதால், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, எனவே நீர்நிலைகளில் சாய, தோல் கழிவு நீர் கலப்பதை தடுக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன, இதில் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் தினகரன், முன்னாள் மாவட்ட இளைஞரணி செயலாளர் ஆர்.திலீப் குமார், மாணவர் இந்தியா மாவட்ட செயலாளர் ஈ.ஐ.முகமது அமீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் கே.தினகரன் நன்றி தெரிவித்தார்.

# தேனி மாவட்டம் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று கட்டுமான பொருட்களை எடுத்து செல்ல கேரள அரசின் வனத்துறை அனுமதி

கம்பம், டிச. 15

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள, வாகனங்கள் மூலம் கட்டுமானப் பொருட்களை எடுத்து செல்ல கேரள வனத்துறையிடம் முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளது.



தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் குடிநீர், பாசன ஆதாரமாகத் திகழும் முல்லைப்பெரியாறு அணை தமிழககேரள எல்லையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறையின் சார்பில், முல்லைப்பெரியாறு அணைப்பகுதியில் ஆண்டுதோறும் மராமத்து பணி மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நிலையில் பொதுப்பணித்துறையின் சார்பில் கடந்த டிசம்பர் 4ஆம் தேதி, தேனியிலிருந்து 2 தனியார் லாரிகளில் தளவாட பொருள்களை ஏற்றிக் கொண்டு, இடுக்கி மாவட்டம், குமுளி வட்டம் வல்லக்கடவு வழியாக முல்லைப்பெரியாறு அணைக்கு கொண்டு சென்றனர்.

சோதனைச் சாவடியில் முல்லைப்பெரியாறு அணைக்கு பொருள்கள் எடுத்துச் செல்ல கேரள வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சியர் தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளருக்கு (நீர்வளத்துறை) தகவல் தெரிவிக்கப்பட்டு.கேரள அரசின் மூலம் வல்லக்கடவு சோதனை சாவடி மற்றும் தேக்கடி படகு இறங்கு தளம் வழியாக முல்லை பெரியாறு அணை பகுதிக்கு கட்டுமான பொருட்களை கொண்டு செல்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா தெரிவித்துள்ளார்.



தென்காசி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக செய்து வரும் கனமழையால் பொதிகை மலையில் வெள்ளம் அதிகமாக வருவதால் வெள்ளத்தில் 3 வயது ஆண் யானை அடித்து வரப்பட்டு குற்றால அருவியில் விழுந்து ஆண் யானை பலி ஆனது அதனை தென்காசி மாவட்ட வன சரக அதிகாரிகள் விசாரணை நடத்திக்கொண்டு வருகின்றனர்

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161